# தூத்துக்குடி நகரமன்றம்
# சாதாரணக் கூட்டப்பொருள்

2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ் பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## பொருள்கள்

## 17–11–2006ல் நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்ட பொருள்

1. தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலைய கடை எண் 39க்கு திரு எஸ். கிங்ஸ்லி ரமேஷ் என்பவர் 16–4–2003 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மாத வாடகையாக ரூ 800/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் பரிசீலனை செய்ததில் இதற்கு முன்னர் உள்ள பழைய மாத வாடகை ரூ 3041/– ஐ விட மிகக் குறைவாக இருப்பதால் மேற்படி கடையை மறு ஏலம் விட நகரமன்றம் தீர்மானிக்கப்பட்டது (MCR NO, 137 dt. 30–5–2003)

மீண்டும் 23–6–2003 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கடை எண் 39க்கு ரூ 810/–க்கு திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியை தீர்மானிக்க நகரமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது. அதில் மன்றப் பொருள் அலுவலக குறிப்பில் இதற்கு அருகிலுள்ள கடை எண் 38க்கு மாத வாடகை ரூ 1998/– கடை எண்40க்கு மாத வாடகை ரூ 2168/– எனவும் கடை எண் 39க்கு பழைய மாத வாடகை ரூ 3041/–ஐ விட மிகக் குறைவாக இருப்பதால் மறு ஏலம் விட மன்றப்பொருள் எழுதி வைக்கப்பட்டது. ஆனால் நகரமன்றம் பரிசீலனை செய்ததில் மேற்படி கடை 1–12–2001 முதல் காலியாக உள்ளதால் நகராட்சிக்கு ஏற்படும் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு அன்னாருக்கு மாத வாடகை ரூ 810/–க்கு ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டது (MCR NO, 274 dt . 31–7–2003)

மேற்படி கடை குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கையில் 8–10–2003ல் தெளிவுரை விளக்கம் கோரப்பட்டது தெளிவுரை விளக்கத்தில் பழைய மாத வாடகையை விட மிகக் குறைவாக இருப்பதால் அன்னாருக்கு கடை வழஙக இயலாது எனவும், நகராட்சி நிர்வாக ஆணையரிடம் தெளிவுரை பெறவும் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் 16–10–2003ல் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் மேற்படி கடை குறித்து தெளிவுரை கோரப்பட்டது. தெளிவுரை கடித எண் 80902/03/ஆர்3 நாள் 25–11–2003ல் பழைய மாத வாடகை ரூ 3041/–க்கு குறையாமல் ஏலம் விட

வேண்டுமெனவும் நகரமன்ற தீர்மான எண் 274 நாள் 31–7–2003ஐ ரத்துச் செய்து மன்றத்திற்கு மீண்டும் பொருள் வைக்க வேண்டும். நகரமன்றம் ஏற்க மறுத்து விட்டால் இழப்பிற்கு நகரமன்றமே பொறுப்பு என தெரிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையரின் தெளிவுரை விளக்கத்தை தெரிவிக்க நகரமன்றத்திற்கு பொருள் வைத்ததற்கு பழைய தீர்மான எண் 274 நாள் 30–7–2003ஐ ரத்துச் செய்து மேற்படி கடையை மறு ஏலம் விட மன்றம் தீர்மானிக்கப்பட்டது (MCR 589 Dt, 17–12–2003)

மேற்படி தீர்மான எண் 589 நாள் 17–12–2003ஐ எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு கிங்ஸ்லி ரமேஷ் என்பவரால் WP 36211/2003 என்ற வழக்கு தொடரப்பட்டது. மீண்டும் WPMP/46981/2004 மற்றும் WPMP /46982/2004 WP 39400/04 என வழக்குகள் தொடரப்பட்டது. வழக்கு எண் WP 39400/04ல் மேற்படி கடையை மறு ஏலம் விடக்கூடாது என்று 28–4–2005ல் தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

இது குறித்து சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு வி. ரகுபதி அவர்களிடம் கருத்துரு கேட்கப்பட்டது. கருத்துருவில் உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு உட்பட்டு மேற்படி நபருக்கு கடை வழஙகவும் தவறும் பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என 13–10–2005ல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேற்படி நபர் திரு கிஙஸ்லி ரமேஷ் என்பவருக்கு கடை வழஙகுவது குறித்து மேற்படி கோப்பு குறித்து முழு விபரத்தையும் தெரிவித்து மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டது. மன்றம் பரிசீலனை செய்ததில் (MCR 484 Dt, 30–11–2005) சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் இசைவு பெற்று மேற்படி நபருக்கு கடை வழஙக மன்றம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது குறித்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் தெளிவுரை கோரப்பட்டதில் மேற்படி கடை ஒப்படைக்க ஏன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி தேவை என்பதற்கு விளக்கம் தெரிவிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 4–1–22006ம் தேதிய நகஎண் 12811/05/ஆர்3 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக மதுரை கிளை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு ஜானி பாட்சா அவர்களிடம் 24–2–2006ல் தெளிவுரை கோரப்பட்டது. 18–3–2006ம் தேதிய கடிதத்தில் மேற்படி வழக்கில் மேல் முறையீடு செய்யவும் இது சம்பந்தமான வழக்குகளை மதுரை உயர்நீதி மன்றத்திற்கு மாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் மதுரை கிளை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமதி ஸ்ரீமதி அவர்களின் 11–11–2006ம் தேதிய கடிதத்தில் கடை எண் 39ஐ திரு கிஙஸ்லி ரமேஷ் என்பவருக்கு உயர்நீதிமன்ற உத்திரவின்படி நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்படைக்குமாறும் மனுதாரரான திரு கிஙஸ்லி ரமேஷ் என்பவரால் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்படுவதை தவிர்க்குமாறும் கூறியுள்ளார்.

ஆகையால் நீதிமன்ற இடைக்கால உத்திரவின்படி மனுதாரர் திரு கிஙஸ்லி ரமேஷ் என்பவருக்கு கடையினை ஒதுக்கீடு செய்யாத பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர நேரிடும் என நகராட்சிக்கு வழக்கறிஞர் கருத்துரு வழஙகியுள்ளார். எனவே WPMP/46981/2004 மற்றும் WPMP /46982/2004 WPNo/ 39400/2004 –ல்

நீதிமன்றத்தின் இறுதி உத்திரவுகளுக்கு கட்டுப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் திரு கிஙஸ்லி ரமேஷ் என்பவருக்கு புதிய பேரூந்து நிலைய கடை எண் 39ஐ மாத வாடகை ரூ 810/– அடிப்படையில் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: நீதிமன்ற வழக்கு எண் WPMP/46981/2004, WPMP /46982/2004 மற்றும் WPNo/ 39400/2004 ல் 28–4–2005 அன்று வழஙகப்பட்ட தடை உத்திரவின்படியும், 13–10–2005ம் தேதிய சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு வி. ரகுபதி அவர்களின் சட்டக் கருத்துருவின்படியும், மேலும் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமதி ஸ்ரீமதி அவர்களின் சட்டக் கருத்துருவின்படியும் நீதிமன்ற அவதூறு வழக்கு தொடர்வதை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி வழக்கின் இறுதி தீர்ப்புக்கு கட்டுப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் தற்காலிகமாக புதிய பேரூந்து நிலைய கடை எண் 39ஐ மேற்படி வழக்கு முடியும் வரை மாத வாடகை ரூ 810/–க்கு திரு கிஙஸ்லி ரமேஷ் என்பவருக்கு கடை வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 30684/2003

**தீர்மான எண் 1039 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

2. தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான சிவன்கோவில் நகராட்சி திருமண மண்டபம் எம். தமிழரசன் என்பவருக்கு மூன்று ஆண்டு கால குத்தகைக்கு ஒரு வருட குத்தகை ரூ 4,05,100/– (ரூபாய் நான்கு லட்சத்து ஐயாயிரத்து நூறு மட்டும்)க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி கல்யாண மண்டபத்தின் உரிமம் 26–2–2007 உடன் அன்னாருக்கு முடிவடைகிறது. எனவே 27–2–2007 முதல் குத்தகைக்கு விடுவதற்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், மேற்படி கல்யாண மண்டபத்தை ஏலம் விடுவதற்கு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 22829/2004

**தீர்மான எண் 1040 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

3. மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறைகள் நகஎண் அ2. 5657/06 நாள் 27–11–2006 ஆணையில் மாண்புமிகு தமிழக கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் மற்றும் தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் 2006–07ம் ஆண்டு ஒதுக்கீட்டின் கீழ் தூத்துக்குடி நகராட்சி கலைஞர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் விநியோகம் செய்ய ராஜாஜி பூஙகாவில் மின் மோட்டார் அமைத்தல் மற்றும் பிற பணிகளுக்கு மதிப்பீடு தொகை ரூ 16.65 லட்சத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதி ஒதுக்கீடு தொகை ரூ 16/– லட்சம் மற்றும் நகராட்சி பொது நிதி செலவினம் ரூ 65,000/– செலவு செய்யவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் அ2.5657/2006 நாள் 27–11–2006 ம் தேதியில் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்கண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் கூடுதல் செலவினம் ரூ 65000/– நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்.தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம்.

இ1. 18913/06

**தீர்மான எண் 1041 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சி அலுவலகத்திலுள்ள மன்றக் கூட்ட அரஙகு மாற்றி அமைக்கப்பட உள்ளது. இதில் கூட்ட அரஙகிலுள்ள மேடைக்கு தரை விரிப்பு விரிக்க கூலி உட்பட ஆகும் செலவினம் ரூ 9000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

தனி 1/இ1/06

**தீர்மான எண் 1042 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சி மன்ற கூட்ட அரஙகில் உள்ள மேடைக்கு தரை விரிப்பு செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வஎண் | பொருள் | அளவு | ரூபாய் |
|---|---|---|---|
| 1 | சௌடாம்பிகா ரெக்ஸின் டெக்கரேட்டர்ஸ் | 20' x 10 ' | 9000/– |
| 2 | ஸ்மைல் இன்டீரியர் டெக்கரேட்டர்ஸ் | 20' x 10 ' | 10400/– |
| 3 | ஏ.முருகேசன் இன்பீரியர் டெக்கரேட்டர்ஸ் | 20' x 10 ' | 10800/– |
| 4 | பியர்ல் சிட்டி இன்டீரியர் டெக்கரேட்டர்ஸ் | 20' x 10 ' | 9600/– |

**அலுவலகக் குறிப்பு:** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சௌடாம்பிகா ரெக்சின் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத்தின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழஙகியதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

தனி 1/இ1/06

**தீர்மான எண் 1043 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேரூந்து நிலையத்தில் அமைந்துள்ள சைக்கிள் ஸ்டாண்டிற்கு புதிய மின் இணைப்பு பெற ஆகும் (மின்வாரியத்தார்க்கு செலுத்த வேண்டிய தொகை) செலவினத் தொகை ரூ.1600/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

அ9/20741/06

**தீர்மான எண் 1044 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள குளோரின் பிளாண்ட்க்கு குளோரின் கொண்டு செல்லும் காப்பர் டியூப் பழுதடைந்ததால் (அடிப்பகுதி முழுதும் அரிக்கப்பட்டதால்) புதியதாக மாற்ற ஆகும் செலவினத் தொகை ரூ.1250/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது. மற்றும் குடிநீர் அவசர அவசியம் கருதி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனத்தாரிடம் இருந்து விலைப்புள்ளிகள் கிடைக்கப்பெற்றுள்ளது. பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலை விபரம் | ஷாஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் திருநெல்வேலி | ஜெயகிஷோர் ஏஜென்ஸீஸ், திருநெல்வேலி | சீலன் அண்ட் கம்பெனி, தூத்துக்குடி |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 அடி நீள காப்பர் டியூப் புதியதாக மாற்றுதல் பணி | 1000/- | 900/- | 800/- |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.சீலன் அண்ட் கம்பெனி தூத்துக்குடி விலைப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாகவும் மற்றும் உள்ளூர் சந்தை நிலவரத்தை ஒத்துள்ளதாலும் இதனை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/020425/06

**தீர்மான எண் 1045 நாள் 29-12-2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு துப்புரவு பணியாளர்கள் மேற்பார்வையாளர்கள், வாகன ஓட்டுநர்கள் 2006ம் வருடததிற்கான காலனிகள் வழஙக உத்தேச செலவுத் தொகை ரூ.1.00 லட்சத்திற்கும், தூத்துக்குடி காதி நிறுவனத்திலிருந்து வாஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்3/91/2006

**தீர்மான எண் 1046 நாள் 29-12-2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

9. பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் அவர்கள் 10-3-06-ம் தேதிய எப்.76/2006/MPC. எண் கடிதத்தில், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி பணியாளர் குடியிருப்புக்கு 11 பிளாக்கில் அமைந்துள்ள (அபார்ட்மெண்ட்) 60 வீடுகளுக்கும் 11 டீன் 2) ஆர்.எம்.ஓ. 3) ஏ.எஸ்.ஆர்.எம்.ஓ. ஆகிய அதிகாரிகளின் 3 குடியிருப்புகளுக்கும் சேர்த்து குடிநீர்க் குழாய் இணைப்பு ஒன்று வழஙகுமாறு கோரி உள்ளார்

மேற்படி குழாய் இணைப்பு கோரும் பகுதி பஞ்சாயத்து பகுதியில் உள்ளதாக நகர அமைப்பு பிரிவிலிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் மருத்துவ விரிவுரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் கடைநிலை ஊழியர்களுக்கு மேற்படி வீடுகள் வழஙகப்பட உள்ளது.

மேற்படி மருத்துவ கல்லூரி பஞ்சாயத்து பகுதியில் உள்ளதாலும், மேற்படி கல்லூரியில் பணிபுரியும் பணியாளர்களின் நலன்கருதி குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குறிப்பு:**</u> மன்றம் அனுமதி வழஙகலாம்

இ3/19682/06

**தீர்மான எண் 1047 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**10.** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் வாகன ஓட்டுநர் (ஓய்வு) ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக **31–10–06**ம் தேதி ஓய்வு பெற்ற திரு எஸ்.மாரியப்பன் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் அனுமதிக்கப்பட்ட அகவிலைப்படி நிலுவைத் தொகை ரூ.**3850/–**ஐ பொது சேமநலநிதிக் கணக்கில் சேர்க்க வேண்டியத் தொகையினை, அன்னார் ஓய்வு பெற்றதால் பொது நிதியிலிருந்து நேரில் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குறிப்பு:**</u> அனுமதிக்கலாம்

எச்1/18624/2006

**தீர்மான எண் 1048 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

11. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் வாகன ஓட்டுநர் (ஓய்வு) ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக **31–10–06**ம் தேதி ஓய்வு பெற்ற திரு எஸ்.மாரியப்பன் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் **1–6–88** முதல் **31–5–89** வரை அனுமதிக்கப்பட்ட **5**வது ஊதியக்குழு ஊதிய உயர்வு நிலுவைத் தொகை ரூ.**3806/–**ஐ வருஙகால வைப்பு நிதியில் சேர்த்து வழஙகும் தொகையை அன்னார் ஓய்வு பெற்றதால் நேரில் பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குறிப்பு:**</u> அனுமதிக்கலாம்

எச்1/18626/2006

**தீர்மான எண் 1049 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

12. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் வாகன ஓட்டுநர் (ஓய்வு) ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31–10–06ம் தேதி ஓய்வு பெற்ற திரு எஸ்.மாரியப்பன் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் பிடிதரம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதிச் சந்தா தொகை ரூ.2960/– வட்டி 7618, மான்யம் ரூ.5000/– மொத்தம் ரூ.15578/– (ரூபாய் பதினைந்தாயிரத்து ஐநூற்றி எழுபத்தெட்டு மட்டும்)ஐ பொதுநிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** அனுமதிக்கலாம்

எச்1/17547/2006

**தீர்மான எண் 1050 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**13.** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் வாகன ஓட்டுநர் (ஓய்வு) ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31–10–06ம் தேதி ஓய்வு பெற்ற திரு எஸ்.மாரியப்பன் என்பவருக்கு அன்னாரின் சொந்த அலுவலர் விடுப்பு கணக்கில் உள்ள நாட்களுக்கு ரூ.20844/– (ரூபாய் இருபதாயிரத்து என்நூற்றி நாற்பத்தி நான்கு மட்டும்)ஐ பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** அனுமதிக்கலாம்

எச்1/18625/2006

**தீர்மான எண் 1051 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**14.** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் வாகன ஓட்டுநர் (ஓய்வு) ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31–10–06ம் தேதி ஓய்வு பெற்ற திரு எஸ்.மாரியப்பன் என்பவருக்கு அன்னாரின் ஈட்டிய விடுப்பு கணக்கில் உள்ள நாட்களுக்கு ரூ.55584/– (ரூபாய் ஐம்பத்தைந்தாயிரத்து ஐநூற்றி என்பத்தி நான்கு மட்டும்)ஐ பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு:** அனுமதிக்கலாம்

எச்1/18627/2006

**தீர்மான எண் 1052 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

15. இந்நகராட்சியில் பொறியர் பிரிவில் லைன் மேனாகப் பணிபுரிந்து 30–6–06ல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திரு சுப்பையா என்பவரின் ஊதியத்தில் பிரதி மாதந்தோறும் ரூ.20/– வீதம் 148 மாதஙகள் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/–ம் அதற்கான வட்டி ரூ.2061/–ம் பஙகுத் தொகை ரூ.5000/– ஆக மொத்தம் ரூ.10021/–ஐ மேற்படியாளருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.5021/– மற்றும் நகராட்சி பஙகுத் தொகை ரூ.5000/– மொத்தம் ரூ.10021/–ஐ வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

இ2/09823/06

**தீர்மான எண் 1053 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

16. இந்நகராட்சியில் பொறியர் பிரிவில் சாலைப்பணியாளராக பணிபுரிந்து 30–6–06ல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திரு செஙகோடியா பிள்ளை என்பவரின் ஊதியத்தில் பிரதி மாதந்தோறும் ரூ.20/– வீதம் 148 மாதஙகள் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/–ம் அதற்கான வட்டி ரூ.2061/–ம் பஙகுத் தொகை ரூ.5000/– ஆக மொத்தம் ரூ.10021/–ஐ மேற்படியாளருக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> சிறப்பு சேமநலநிதி தொகை ரூ.5021/– மற்றும் நகராட்சி பஙகுத் தொகை ரூ.5000/– மொத்தம் ரூ.10021/–ஐ வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

இ2/09429/06

**தீர்மான எண் 1054 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

17. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31–5–1997ல் ஓய்வு பெற்ற திரு எஸ்.ஷேக் ரசூல் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் அனுமதிக்கப்பட்ட 6வது ஊதிய திருத்தம் வித்தியாசத் தொகை ரூ.11149/– (நிலுவைத் தொகை ரூ.6708/– வட்டித் தொகை ரூ.4441/–) (ரூபாய் பதினொன்றாயிரத்து நூற்றி நாற்பத்தொன்பது மட்டும்) வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>குறிப்பு:</u> அனுமதிக்கலாம்.

எச்1/17615/2006

**தீர்மான எண் 1055 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**18.** இந்நகராட்சி பொதுமக்களுக்கு சிக்குன் குன்னியா நோய் தடுப்பது பற்றி பிரசுரிக்கப்பட்ட 20,000 அறிவிப்பு நோட்டீஸ் அச்சடித்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பிய பில் தொகை ரூ.4,455/–ஐ டிசி86 தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு அச்சகம் லிமிடெட்க்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்3/15461/2006

**தீர்மான எண் 1056 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**19.** இந்நகர்ப்பகுதி சிதம்பரநகர் 4வது தெரு ஆட்டோ காலனி, வார்டு சி, பிளாக் 58 நகரளவு எண் 41ல் ஆதி பிரம்மசக்தி கோவில் 11.40மீ x 5.5மீ அளவில் ஆக்கிரமிப்பு செய்து கோவில் கட்டப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்தக்கோரி நிர்வாகி, ஆதி பிரம்ம சக்தி கோவில், தூத்துக்குடி அவர்களுக்கு நோட்டீஸ் 16–9–06ம் தேதி சார்பு செய்யப்பட்டது. மேற்படி ஆதி பிரம்மசக்தி கோவில் தர்மகர்த்தா திரு யூ.சிவன் என்பவர் மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.358/06 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆணையர், தூத்துக்குடி நகராட்சியை பிரதிவாதியாக சேர்த்துள்ளார். மேற்படி வழக்கில் நகர்மன்ற வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1/4037/2005

**தீர்மான எண் 1057 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

**20.** திருமதி பார்வதி என்பவர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நிதிமன்றத்தில் ஏற்கனவே தீர்ப்பு வழஙகப்பட்ட வழக்கு எண் ஓ.எஸ்.30/04ஐ எதிர்த்து தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் ஏ.எஸ்.133/06 என்ற எண்ணில் அபபீல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையரை அப்பீல் பிரதிவாதியாக சேர்த்துள்ளார். எனவே மேற்படி வழக்கில் நகர்மன்ற வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1/18123/06

**தீர்மான எண் 1058 நாள் 29–12–2006**

**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

21. இந்நகர்ப்பகுதி சிதம்பர நகர் தெருவிலுள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்துவதற்கு ஒ.எஸ் 378/05 வழக்கில் வழஙகப்பட்ட தீர்ப்பின்படி ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்துவதற்கு 14–9–06ம் தேதி நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நோட்டீஸ் சார்பு செய்யப்பட்ட இடத்திலுள்ள ஆக்கிரமிப்பாளர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை பெஞ்சில் W.P/8872/06. 8884/06 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி ஆக்கிரமிப்பாளர்கள் தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.411/06 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி வழக்கில் திரு வரதன் 1வது பிரதிவாதியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் 2வது பிரதிவாதியாகவும் ஆணையர் தூத்துக்குடி நகராட்சி 3வது பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கில் நகர்மனற் வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1/19340/06

**தீர்மான எண் 1059 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

22. இந்நகர்ப்பகுதி பெருமாள்புரம் தெரு, வார்டு 2, பிளாக் 23 நகரளவு எண் 2931/2ல் திருமதி செல்லம்மாள் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ள கட்டிடத்தினை அப்புறப்படுத்தக்கோரி வாதி திரு ரவிச்சந்திரன் என்பவர் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் ஒ.எஸ்.263/06 என்ற எண்ணில் வழக்கு தொடர்ந்துள்ளார். ஆக்கிரமிப்பாளர் திருமதி.செல்லம்மாள் என்பவரை 1வது பிரதிவாதியாகவும் நகராட்சி ஆணையரை 2வது பிரதிவாதியாகவும், மாவட்ட ஆட்சியர் , தூத்துக்குடி அவர்களை 3வது பிரதிவாதியவும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வழக்கில் நகர்மன்ற வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1/14095/06

**தீர்மான எண் 1060 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

23. தூத்துக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அஙகீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்துறை அரசு நிலை எண் 59 நாள் 25–7–06ல் சில நிபந்தனைகளை தளர்த்தி உத்திரவிட்டுள்ளது. மேற்படி அரசாணையின் விபரஙகள் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தினமலர்

நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.600/—யை தினமலர் நாளிதழ்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் முன்அனுமதி யுடன் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி1/13033/06

**தீர்மான எண் 1061 நாள் 29—12—2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

24. திரு சஙகரலிஙகம் 26—3—2003 தேதியில் பொது சுகாதார பிரிவு தளவாடச் சாமான்கள் சப்ளை செய்யும் வகைக்கு முன் வைப்புத் தொகை ரூ.1500/— செலுத்தியுள்ளார். மூன்று ஆண்டுகளுக்கு மிகைப்பட்டதால் மேற்படி தொகை காலஙகடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டது. தற்போது அத்தொகை ரூ.1500/—ஐ திரும்ப வழஙக கோரியுள்ளார். எனவே மேற்படி தொகை ரூ.1500/— அன்னாருக்கு திரும்ப வழஙக மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

பி3/19243/06

**தீர்மான எண் 1062 நாள் 29—12—2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

25. இந்நகராட்சி வார்டு எண் 38, கதவு எண் 27/1, 27/2, 27/3, 27/4 பால விநாயகர் கோவில் தெருவில் வரிவிதிப்பு எண் 382182, 382183, 382184, 382185 ஜெயின்சன்ஸ் என்ற நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு எஸ்.ஜானகிராஜ் என்பவர் தனது கட்டிடஙகளுக்கு திருத்தியமைக்கப்பட்ட சொத்துவரியை நகராட்சியை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்ற கிளை நீதிமன்றத்தில் வழக்கு எண் 6882/05ன்படியும், தற்பொழுது தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் CMP வழக்கு எண் CMP 32/06ன்படியும் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி இவ்வழக்கு தொடர்பாக நகராட்சி சார்பாக மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திருமதி ஸ்ரீமதியும் தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் இந்நகர்மன்ற வழக்கறிஞரும் வழக்காட அனுமதியும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

அ5/19680/05

**தீர்மான எண் 1063 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

26. இந்நகராட்சிக்கு லெவஞ்சிபுரம் தெற்கு பகுதியில் மண்சாலையில் செம்மண் நிரப்பும்பணி பொது நிதியில் செய்வதற்கு 29–11–06 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு 0. 90% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 0 . 38% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 998 தேதி 14–9–06ல் ரூ. 19,000/– க்கு அனுமதி வழஙகியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 38% குறைவானதுமான திரு எஸ். ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 83/2006–07

**தீர்மான எண் 1064 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

27. இந்நகராட்சி பகுதி சத்திரம் தெருவில் உள்ள நகராட்சி பள்ளியின் பகுதியிலுள்ள சத்துணவு மையத்தில் ( 2+4 ) சமையல் அறை கட்டும் பணி பொது நிதியில் கட்டுவதற்கு 13–12–06 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு பி. கண்ணன் | மதிப்பீட்டிற்கு 3.16 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு 3. 39% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 999 தேதி 14–9–06ல் ரூ. 75,000/– க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 3.16 % குறைவானதுமான திரு பி. கண்ணன்' என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 86/2006–07

**தீர்மான எண் 1065 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

28. இந்நகராட்சி குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மானக் குழாயில் ஏற்படும் அடைப்பு மற்றும் நீர் கசிவுகளை சரிசெய்யும் பணி பொது நிதியில் செய்ய 29–11–06 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டிற்கு 0.76 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு 1.52% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 1025 தேதி 17–11–06ல் ரூ. 20,000/– க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.76 % குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

மபஎண் 102/06–07

**தீர்மான எண் 1066 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

29. இந்நகராட்சி ஜார்ஜ் சாலையிலிருந்து புல்தோட்டம் வரை செல்லும் மழைநீர் வடிகால் சுவற்றை உயர்த்தும் பணிக்கு உரிய பொருள்களை விநியோகம் செய்யும் பணியினை சொர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் செய்வதற்கு 13–12–06 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின்

ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு பி. கண்ணன் | மதிப்பீட்டிற்கு 8.03 % அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டிற்கு 0.51 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 1020 தேதி 17–11–06ல் ரூ. 3, 25,000/– க்கு அனுமதி வழஙகியுள்ளது.

3. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 51 % குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். .

மபஎண் 103/2006–07

**தீர்மான எண் 1067 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

30. இந்நகராட்சிக்கு சொந்தமான எட்டையாபுரம் ரோடு சந்திப்பில் கழிவுநீர் தேஙகி பொதுமக்களுக்கு இடையூராக உள்ளதால் மேற்படி சாலையில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ 60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்

**மபஎண்** 109/2006-07

**தீர்மான எண் 1068 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

31. இந்நகராட்சியின் 1 முதல் 10வது வரையிலுள்ள வார்டுகளில் உள்ள சாலைகள் தற்போது பெய்த கனமழையினால் சாலைகள் அனைத்தும் பழுதடைந்து வாகனஙகள் மற்றும் பொதுமக்கள் செல்ல இயலவில்லை. மற்றும் மழைநீர் சாலைகளில் தேஙகி சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளில்சரள் நிரப்பி செப்பனிடவும் மெட்டல் சாலைகளில் மெட்டல் பாட்ஜ் போடவும், தார்சாலைகளில் குண்டுங குழியுமான இடஙகளில் தார் பாட்ஜ் போட்டு சாலைகளை சீரமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 128 /2006–07

**தீர்மான எண் 1069 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

32. இந்நகராட்சியின் 11 முதல் 20வது வரையிலுள்ள வார்டுகளில் உள்ள சாலைகள் தற்போது பெய்த கனமழையினால் சாலைகள் அனைத்தும் பழுதடைந்து வாகனஙகள் மற்றும் பொதுமக்கள் செல்ல இயலவில்லை. மற்றும் மழைநீர் சாலைகளில் தேஙகி சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளில்சரள் நிரப்பி செப்பனிடவும் மெட்டல் சாலைகளில் மெட்டல் பாட்ஜ் போடவும், தார்சாலைகளில் குண்டுங குழியுமான இடஙகளில் தார் பாட்ஜ் போட்டு சாலைகளை சீரமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 90,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 129/2006–07

**தீர்மான எண் 1070 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

33. இந்நகராட்சியின் 21 முதல் 30வது வரையிலுள்ள வார்டுகளில் உள்ள சாலைகள் தற்போது பெய்த கனமழையினால் சாலைகள் அனைத்தும் பழுதடைந்து வாகனஙகள் மற்றும் பொதுமக்கள் செல்ல இயலவில்லை. மற்றும் மழைநீர் சாலைகளில் தேஙகி சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளில்சரள் நிரப்பி செப்பனிடவும் மெட்டல் சாலைகளில் மெட்டல் பாட்ஜ் போடவும், தார்சாலைகளில் குண்டுங குழியுமான இடஙகளில் தார் பாட்ஜ் போட்டு சாலைகளை சீரமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 130/2006–07

**தீர்மான எண் 1071 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

34. இந்நகராட்சியின் 31 முதல் 40வது வரையிலுள்ள வார்டுகளில் உள்ள சாலைகள் தற்போது பெய்த கனமழையினால் சாலைகள் அனைத்தும் பழுதடைந்து வாகனஙகள் மற்றும் பொதுமக்கள் செல்ல இயலவில்லை. மற்றும் மழைநீர் சாலைகளில் தேஙகி சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளில்சரள் நிரப்பி செப்பனிடவும் மெட்டல் சாலைகளில் மெட்டல் பாட்ஜ் போடவும், தார்சாலைகளில் குண்டுங குழியுமான இடஙகளில் தார் பாட்ஜ் போட்டு சாலைகளை சீரமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 131/2006–07

**தீர்மான எண் 1072 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

35. இந்நகராட்சியின் 41 முதல் 51 வது வரையிலுள்ள வார்டுகளில் உள்ள சாலைகள் தற்போது பெய்த கனமழையினால் சாலைகள் அனைத்தும் பழுதடைந்து வாகனஙகள் மற்றும் பொதுமக்கள் செல்ல இயலவில்லை. மற்றும் மழைநீர் சாலைகளில் தேஙகி சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட சாலைகளில்சரள் நிரப்பி செப்பனிடவும் மெட்டல் சாலைகளில் மெட்டல் பாட்ஜ் போடவும், தார்சாலைகளில் குண்டுங குழியுமான இடஙகளில் தார் பாட்ஜ் போட்டு சாலைகளை சீரமைக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.
அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 132/2006–07

**தீர்மான எண் 1073 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

36. இந்நகராட்சிக்குச் சொந்தமான 51வது வார்டில் அமைந்துள்ள ஆசிரியர் காலனி 8ம் மற்றும் 9ம் தெருவில் குடிநீர் விநியோகம் சீராக வராமல் பாதிப்படைந்துள்ளதால் அதனை சரிசெய்திட தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ 1,20,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 119/2006–07

**தீர்மான எண் 1074 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

37. இந்நகராட்சிக்குச் சொந்தமான சி.வ. தொடக்கப் பள்ளியில் மரம் விழுந்து கட்டிடம் முழுவதும் சேதமடைந்துள்ளதால் மாணவ, மாணவிகள் பள்ளி அறையில் படிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பள்ளி கட்டிடத்தினை புதிதாக கட்டிடும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ10,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 115/2006–07

**தீர்மான எண் 1075 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

38. இந்நகராட்சியில் சொத்துவரி, குடிநீர்க்கட்டண இணைப்பு பெயர்மாற்றத்திற்கு இதுவரை கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை. நகராட்சியின் நிதிநிலையை கருத்தில் கொண்டு இதர நகராட்சியில் செயல்படுத்துவது போல சொத்துவரி விதிப்புகள் மற்றும் குடிநீர் கட்டண இணைப்புகளுக்கு பெயர்மாற்றம் செய்ய பெயர் மாறுதல் கட்டணமாக ஒவ்வொரு வரிவிதிப்புகளுக்கும் குறைந்த பட்ச தொகையான ரூ 100/–ஐ நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

அ1. 19221/06

**தீர்மான எண் 1076 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

39. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69–0280 மெட்டடோர் வாகனம் வல்லநாடு தலைமை பணியிடம் குடிநீர்த் திட்டக் குழாய்கள் பராமரிப்புக்கு பயன்படுத்தி வருவது ஆகும். வாகனத்தின் தகுதிச் சான்று ஒவ்வொரு ஆண்டும் தேவையான பழுதுநீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மீண்டும் தகுதிச் சான்று புதுப்பித்து இயக்க வேண்டும். வாகனத்தின் தகுதிச் சான்று பணிகளுக்கான செலவீனத்திற்கும் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் கோரவும் மன்றம் தனது தீர்மானம் எண் 672 நாள் 22–5–2006ல் அனுமதி அளித்ததின் பேரில் 29–11–2006ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று விலைப்புள்ளிகள் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ் கால்டுவெல் காலனி, தூத்துக்குடி | .. 21,770/– |
| 2. | மெசர்ஸ் ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ்,சிதம்பரநகர், தூத்துக்குடி | .. 19,650/– |
| 3. | மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை தூத்துக்குடி | ..21,200/– |

அலுவலகக் குறிப்பு: வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் மெசர்ஸ் ஆர்என்ஆர். மெக்கானிக்கல்ஒர்க்ஸ் நிறுவனத்தினர் விலைப்புள்ளி குறைவானது ஆகும். இதனை ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் 020002/06/இ1

**தீர்மான எண் 1077 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

40. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69D–5052 கழிவுநீர் லாரியில் பழுதுநீக்கம் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று பெற்று இயக்க வேண்டும். வாகனத்தின் தகுதிச் சான்று பணிகளுக்கான செலவீனத்திற்கும் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் கோரவும் மன்றம் தனது தீர்மானம் எண் 672 நாள் 22–5–2006ல் அனுமதி அளித்ததின் பேரில் 4–12–2006ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று விலைப்புள்ளிகள் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1. மெசர்ஸ் ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ்,சிதம்பரநகர், தூத்துக்குடி ...ரூ 27,250/–

2. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ் கால்டுவெல் காலனி, தூத்துக்குடி ...ரூ 27,500/–

3. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை தூத்துக்குடி .. 25,150/–

அலுவலகக் குறிப்பு:1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்தினர் விலைப்புள்ளி குறைவானது ஆகும். இதனை ஏற்று அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியத்தை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வண்டியினை பழுதுபார்க்க உத்திரவு வழுங்கியதை5 மன்றம் அங்கீகரிக்கலாம்.

நகஎண் 020212–1/ இ1/06

**தீர்மான எண் 1078 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

41. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69D–5052 கழிவுநீர் லாரியில் உள்ள ஆயில் இஞ்சின் , மட்பம்பு பழுதுநீக்கம் செய்யவும் புதிய ஹேறாஸ் பைப் பொருத்திக்கொள்ளவும் ஆன செலவீனத்திற்கும், அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் கோரவும் மன்றம் தனது தீர்மானம் எண் 672 நாள் 22–5–2006ல் அனுமதி அளித்ததின் பேரில் 4–12–2006ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று விலைப்புள்ளிகள் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ்

கால்டுவெல் காலனி, தூத்துக்குடி ...ரூ 16,800/–

2. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ்
இஞ்சினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை
தூத்துக்குடி .. ரூ 14,550/–

3 .மெசர்ஸ் ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல்
ஒர்க்ஸ்,சிதம்பரநகர், தூத்துக்குடி ...ரூ 15,540/–

அலுவலகக் குறிப்பு: கழிவுநீர் அகற்றும் பணிக்கு மேற்படி வேலைகள் அவசியம் செய்து கொடுக்க வேண்டியிருப்பதால் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் நிறுவன விலைப்புள்ளியை ஏற்று அனுமதி அளிக்கலாம். அவசர அவசியத்தை முன்னிட்டு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பழுது பார்க்க வேலை உத்திரவு வழஙகியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

நகஎண் 020212–2/ இ1/06

**தீர்மான எண் 1079 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.**

42. இந்நகராட்சிப் பகுதியில் சாலையில் தேஙகியுள்ள தண்ணீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளுக்கு தேவையான எஞ்சின், பம்புசெட், ஹோஸ், புட்வால்வு மற்றும் இணைந்த பொருட்களுக்கான உத்தேச செலவீனம் ரூ 47,000/–க்கு மன்றம் தனது தீர்மானம் எண் 1030 நாள் 17–11–2006ல் அனுமதி அளித்ததின் பேரில் 29–11–2006ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசர்ஸ்<br>பிளாட் எண் 7 வசந்த நகர், மதுரை–3 | ரூ 45,900/–<br>டேவணித்தொகை செலுத்தி உள்ளார் |
| 2. | மெசர்ஸ் ரௌக்கால் அன்கோ<br>3, சீயோன் பில்டிஙஸ்<br>மிஷின் காஸ்பிட்டல் காம்ப்ளக்ஸ்<br>மதுரை 01 | ரூ 48,000/–<br>டேவணித்தொகை<br>செலுத்தியுள்ளார் |

அலுவலகக் குறிப்பு: 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆனந்தா எண்டர்பிரைசர்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதி அளிக்கலாம்.

நகஎண் இ1. 019400/2006

**தீர்மான எண் 1080 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

43. இந்நகராட்சிக்கு சொந்தமான மேலசண்முகபுரம் 2ம் தெரு சந்து பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ 65000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 111/2006–07

**தீர்மான எண் 1081 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

44. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேரூந்து நிலையத்திலுள்ள URINAL மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதால் மேற்கண்ட இடத்தினை அரசு செயலர் அவர்கள் கடந்த 13–8–2006 அன்று ஆய்வு செய்து மேற்கண்ட URINAL புதுப்பிக்கும்படி அறிவுரை வழஙகியுள்ளார். எனவே மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ 50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண்

**தீர்மான எண் 1082 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

45. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் நவீன கழிப்பிடஙகள் இரண்டையும் புதுப்பித்து மராமத்து பணிகள் செய்யவும் பேரூந்து நிலையத்தின் உட்புறம் சேதடைந்துள்ள தளம் சரி செய்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ 55,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண்

**தீர்மான எண் 1083 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

46. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள கந்தசாமிபுரம் பொதுக் கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும்பொதுமக்கள் பயன்படுத்த முடியாமல் இடிந்து விழும்நிலையில் உள்ளதாலும் மேற்படி பொதுக் கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண்

**தீர்மான எண் 1084 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

47. இந்நகராட்சிக்கு சொந்தமான 24வது வார்டு ரயில்வே குடியிருப்பு வழியாக செல்லும் இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள மழைநீர் வடிகாலை தூர்வாரி அப்புறப்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ 50,000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.
அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் 122/2006–07

**தீர்மான எண் 1085 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

48. இந்நகராட்சி பகுதி போல்பேட்டை 60' சாலையில் ஆரம்ப முதலீடு திட்டத்தின் கீழ் தார்தளம் அமைக்கும் பணிக்கு 20–12–2006 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு எஸ். சுதர்சன் | ரூ 0.17% | மதிப்பீட்டிற்கு குறைவு டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திருமதி வி. கஸ்தூரி | ரூ 0.88 | மதிப்பீட்டிற்கு அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

அலுவலகக் குறிப்பு:

1. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடித எண் 12463/05/UB-1 நாள் 6–10–2005ம் தேதிய கடிதத்தில் ரூ 13.50 இலட்சம் மதிப்பீடு நிர்வாக வழஙகப்பட்டுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.17% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 110/2006–07

**தீர்மான எண் 1086 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது.**

49. இந்நகராட்சி பகுதி இராஜாஜி பூஙகாவில் பம்பு அறை கட்டுதல் பணிக்கு 20–12–2006 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

1. திரு எஸ். சுதர்சன் ரூ 1.92% மதிப்பீட்டிற்கு அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்

2. திரு எஸ். ரம்போலா ரூ 0.17 மதிப்பீட்டிற்கு குறைவு டேவணித்தொகை செலுத்தியுள்ளார்

அலுவலகக் குறிப்பு:

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 839 நாள் 17–7–2006ல் ரூ 16,00,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.17% குறைவானதுமான திரு ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

இ3. 18193/1/06

**தீர்மான எண் 1087 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்பு1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது.**

50. இந்நகராட்சிக்குட்பட்ட V.E.ரோட்டில் அமைந்திருக்கும் தமிழ்நாடு மெர்க்கண்டைல் பேங்க் எதிரில் ஹோலிகிராஸ் பள்ளி அருகிலும் மற்றும் அரசு மருத்துவமனை மற்றும் தெற்கு போலீஸ் ஸ்டேசன் பகுதியிலும் பயணிகள் நிழற்குடை அமைக்கவும், மற்றும் அதில் மின் வசதிகள் செய்து கொள்வதற்கும் தடையில்லா சான்று கேட்டு தமிழ்நாடு மெர்க்கண்டைல் பேங்க் நிறுவனத்தினர் விண்ணபித்து உள்ளனர். தூத்துக்குடி பியூட்டிபிகேஷன் கமிட்டியுடன் சேர்ந்து செயல்படுவதாகவும் அதற்குரிய கடிதத்தையும் இணைத்து அனுப்பி உள்ளனர். எனவே மேற்படி இடங்களில் தமிழ்நாடு மெர்க்கெண்டைல் பேங்க் நிறுவனத்தார் அவர்களது சொந்த செலவில் பயணிகள் நிழற்குடை மின் இணைப்பு ஆணையாளர், நகராட்சி அலுவலகம் என்ற பெயரில் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.

இ5/019201/06

**தீர்மான எண் 1088 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.**

51. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 25 கு.வே. திறன் மின் மோட்டாரின் ஸ்டேட்டர் வைண்டிங புதியதாக காயில் சுற்றுவதற்கு 18–12–06ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கு ஒப்புநோக்கு பட்டியலும் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜாய் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், தூடி | ரூ. 9500/– | மதிப்பீட்டை விட ரூ.500/– குறைவு |
| 2. | சிவா எலக்ட்ரிக்கல்ஸ், தூடி | ரூ.9900/– | மதிப்பீட்டை விட ரூ.100/– குறைவு |

மேற்கண்ட விபரப்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஜாய் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் தூத்துக்குடி ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்தை ஒத்துள்ளதால் இதனை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ3/017836/06

**தீர்மான எண் 1089 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது.**

52. இந்நகராட்சிக்கு சொந்தமான குரூஸ்புரம் கழிவுநீர் நீரேற்று நிலையம் மற்றும் சத்திரம் தெரு கழிவுநீர் நீரேற்று நிலையங்களில் கிணறுகளில் அடைத்திருக்கும் மண்ணை தூர் வாற 7–11–2006ம் தேதியில் விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கு ஒப்புநோக்கு பட்டியலும் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | திரு சுரேஷ். தூத்துக்குடி | ரூ.5550/– |
| 2. | திரு கே.அய்யனார், தூத்துக்குடி | ரூ.4950/– |
| 3 | திரு பி.ரமேஷ், தூத்துக்குடி | ரூ.5200/– |

மேற்கண்ட விபரப்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் கே.அய்யனார் தூத்துக்குடி விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்தை ஒத்துள்ளதால் இதனை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/06048/06

**தீர்மான எண் 1090 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

53. இந்நகராட்சிக்கு சொந்தமான குரூஸ்புரம் கழிவுநீர் நீரேற்று நிலையம் மற்றும் சத்திரம் தெரு கழிவுநீர் நீரேற்று நிலையங்களில் கழிவு நீர் சேகரம் செய்யும் கிணறுகளில் முக்கால் பகுதி மண் அடைத்துள்ளதால் இரண்டு கிணறுகளிலும் மண் தூர் வாற ஆகும் செலவுத் தொகை ரூ.5000/–க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/06048/06

**தீர்மான எண் 1091 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.**

54. இந்நகராட்சியில் பராமரிப்பிலுள்ள அண்ணாநகர் 3ம் தெரு சந்திப்பில் இன்னர் வீல் கிளப் தூத்துக்குடி ஸ்பிக் நகர் மூலம் பயணிகள் நிழற்கூடம் அமைக்க அனுமதி கோரியுள்ளனர். எனவே மேற்கண்ட இடத்தில் மேற்கண்ட கிளப்பின் மூலம் பயணிகள் நிழற்குடை அமைக்கவும் அதனை அவர்களே பராமரிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்

இ3/ /06

**தீர்மான எண் 1092 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.**

55. இந்நகராட்சிக்கு சொந்தமான வடக்கு வாணியன்விளை தெருவில் மழைநீர் வடிகால் இல்லாததால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூராக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்

ம.ப.எண்.117/2006–07

**தீர்மான எண் 1093 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.**

56. இந்நகராட்சிக்கு சொந்தமான செல்வநாயகபுரம் தெரு 1 முதல் 2வது தெரு வரை சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.54,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்

ம.ப.எண்.113/2006–07

**தீர்மான எண் 1094 நாள் 29–12–2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது.**

57. இந்நகராட்சிக்குட்பட்ட இராஜாஜி பார்க் நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 20கு.வே. திறன் மின் மோட்டாரின் ஸ்டேட்டர் வைண்டிங எரிந்து போன நிலையில் உள்ளது. மேற்படி மோட்டாரின் ஸ்டேட்டர் வைண்டிஙகை புதியதாக ரீ–வைண்டிங செய்ய வேண்டும்.

இதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/020426/06

**தீர்மான எண் 1095 நாள் 29—12—2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

58. இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 20.கு.வே. திறன் மின் மோட்டாரின் ஸ்டேட்டர் வைண்டிங புதியதாக காயில் சுற்றுவதற்கு 18—12—06ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கு ஒப்புநோக்கு பட்டியலும் தயாரிக்கப்பட்டது.

| வ. எண் | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தபுள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | சிவா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், தூடி | ரூ. 8500/— | மதிப்பீட்டை விட ரூ.1500/— குறைவு |
| 2. | ஜாய் எலக்ட்ரிக்கல்ஸ், தூடி | ரூ.8000/— | மதிப்பீட்டை விட ரூ.2000/— குறைவு |

மேற்கண்ட விபரப்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஜாய் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் தூத்துக்குடி ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்தை ஒத்துள்ளதால் இதனை மன்றம் அஙகீகரிக்க வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அஙகீகரிக்கலாம்.

இ3/020426/06

**தீர்மான எண் 1096 நாள் 29—12—2006**
**அலுவலக குறிப்புப்படி அஙகீகரிக்கப்பட்டது**

**59.** இந்நகராட்சிக்கு சொந்தமான TN69-3952 & 3953 டிராக்டர் டிரைலர் வாகனம் பொது சுகாதாரப் பிரிவுக்கு பயன்படுத்தி வருவது ஆகும். தகுதிச் சான்று காலம் முடிவடைந்து உள்ளதால் தேவையான பழுது நீக்கம் செய்து ஒவ்வொரு ஆண்டும் வட்டார போக்குவரத்து அலுவலத்தில் மீண்டும் தகுதிச்சான்று பெற்று இயக்க வேண்டும். வாகனத்தின் தகுதிச்சான்று பணிகளுக்கான செலவினத்திற்கும், அரசு அஙகீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் கோரவும் மன்றம் தனது தீர்மானம் எண் 672 நாள் 22—5—2006ல் அனுமதி அளித்ததன் பேரில் 6—12—06ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. இதில் மூன்று விலைப்புள்ளிகள் அரசு அஙகீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்த வரப்பெற்று உள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஷ் கிளாட்வெல் காலனி, தூடி | ரூ.18,410/— |
| 2. | மெசர்ஸ் ஆர்.என்.ஆர்.மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பர நகர், தூத்துக்குடி | ரூ.16,800/— |
| 3 | மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் | ரூ.17,820/— |

| | | |
|---|---|---|
| | இஞ்சினியரிங ஒர்க்ஸ், தூத்துக்குடி | |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் மெசர்ஸ் ஆர்.என்.ஆர்.மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தினர் விலைப்புள்ளி குறைவானது ஆகும். இதனை ஏற்று அனுமதிக்கலாம்.

இ1/020262/06

**தீர்மான எண் 1097 நாள் 29—12—2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.**

60. இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள 12வது மையவாடியில் 2வது வாடியில் எரியூட்டும் கொட்டகை அமைக்க சைவ வேளாளர் சங்கம் தூத்துக்குடி தங்களது சொந்த செலவில் எரியூட்டும் கொட்டகை கட்டி அதனை பயன்படுத்த நகராட்சி அனுமதி கோரியுள்ளனர். எனவே மேற்கண்ட சங்கத்தின் மூலம் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண் /2006—07

**தீர்மான எண் 1098 நாள் 29—12—2006**
**அலுவலக குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது.**

**<u>61. நகர்மன்றத் தலைவரால் கொண்டு வரப்படும் தீர்மானம்:—</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் பிரதான சாலைகள் பழுதடைந்து பொது மக்கள் மற்றும் வாகனஙகளின் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமான நிலை காணப்படுகிறது.

1) பாலவிநாயகர் கோவில் தெரு
2) போல்பேட்டை 60' ரோடு எட்டையாபுரம் ரோடு முதல் திரேஸ்புரம் வரை
3) போல்பேட்டை 60' ரோடு S.S.மாணிக்கபுரம் முதல் D.S.F. வழியாக எட்டையாபுரம் ரோடு வரை
4) செல்வநாயகபுரம் மெயின் ரோடு
5) காமராஜர் சாலை தேவர்புரம் ரோடு முதல் காமராஜ் கல்லூரி வரை
6) தாமோதர நகர் மெயின் ரோடு
7) எட்டையாபுரம் ரோடு முதல் W.G.C.ரோடு வரை ராமையா லாட்ஜ் ரோடு

மேற்படி சாலைகள் அமைப்பதற்கு நகராட்சியில் போதுமான நிதி இல்லாத காரணத்தினால் பொதுமக்களின் நலன் கருதி மேற்படி இடஙகளில் நெடுஞ்சாலைத் துறையினர் மூலம் சாலைகள் அமைப்பதற்கு அனுமதிப்பது தொடர்பாக மன்றம் தீர்மானிக்க.

**தீர்மானஎண் 1099 நாள் 29—12—200**

**வரிசை எண்கள் 1 முதல் 7 முடிய உள்ள இடஙகளில் சாலைகள் அமைக்க நெடுஞ்சாலை துறையினரை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி.